# தாய்மார் கழக நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி

புதிய பதிப்பு

சுகாதார மேம்பாட்டுப் பணியகம்
சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

# தாய்மார் கழக செயற்பாடுகளுக்கான வழிகாட்டி

புதிய பதிப்பகம்

சுகாதார மேம்பாட்டு அலுவலகம்

சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

2018

**ISBN 978-955-1829-22-3**

**முதலாம் பதிப்பு** – 2015 சுகாதாரக் கல்விப் பணியகம்

**புதிய தொகுப்பு** – 2018 சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

**பதிப்பு** – எஸ் என்ட் எஸ் பிரின்டர்ஸ்

இல. 49, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு 10.

**அட்டை உறை** – திரு. தனுஷ்க ஹஸரங்க, சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முதலாவது பதிப்புக்கான முன்னுரை (2015) | iii |
| புதிய பதிப்புக்கான முன்னுரை | 1 |
| அறிமுகம் | 2 |
| தாய்மார் கழகம் என்றால் என்ன? | 2 |
| பின்னணி | 3 |
| இலங்கையில் தாய்மார் கழகம் உருவாகிய சரித்திரம் | 3 |
| நோக்கங்கள் | 4 |
| தாய்மார் கழகத்தின் பிரதான நோக்கம் | 4 |
| தாய்மார் கழகத்தின் விஷேட நோக்கங்கள் | 4 |
| இலக்கு | 5 |
| சுகாதார வைத்திய அதிகார பிரிவொன்றில் தாய்மார் கழகம் ஒன்றை ஆரம்பித்தல் | 5 |
| தாய்மார் கழகமொன்றில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்கள் | 7 |
| தாய்மார் கழக அங்கத்தவர்களின் பொறுப்புக்கள் | 09 |
| சுகாதார ஊழியர்களின் பொறுப்புகள் | 10 |
| சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியில் செயற்திறன் குறிகாட்டிகளை அளவிடுவதற்கான அளவு கோள்கள் | 14 |
| சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியில் வெளியீட்டு குறிகாட்டிகளை அளவிடுவதற்கான அளவு கோள்கள் | 15 |
| சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியில் முடிவுக் குறிகாட்டிகளை அளவிடுவதற்கான அளவு கோள்கள் | 16 |
| தாய்மார் கழகங்கள் மூலம் அமுல்படுத்த எதிர் பார்க்கப்படும் செயற்பாடுகள் | 20 |
| போஷணை மேம்பாட்டு செயற்பாடுகள் | 21 |
| சமூகத்தின் போஷாக்கு மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்கு தாய்மார் கழகங்களின் பங்களிப்பை வழங்கக்கூடிய சில நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன. | 25 |
| சுகாதார மேம்பாட்டுடன் சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாடுகள் | 26 |
| தாய்மார் கழகங்கள் நிறுவுவதிலும் நடாத்திச் செல்வதிலும் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் | 29 |
| சாராம்சம் | 32 |
| பின்னிணைப்பு | 33 |
| முதற் பிரதிக்காக தமது பங்களிப்பை வழங்கியவர்கள் | 44 |
| வழிநடத்தல்களை மறுப்பரிசீலனை செய்வதற்குப் பங்களிப்பு வழங்கியவர்கள் | 46 |

## முதலாவது பதிப்புக்கான முன்னுரை (2015)

தாய்மார் கழக குழு என்பது இதுவரைக்கும் இலங்கையில் அடித்தள சமூகத்தில் அதி உன்னதமாக நிலவி வரும் பலதரப்பட்ட நன்மைகள் வழங்கக்கூடிய ஓர் குழுவாகும். சமூகத்தில் சுகாதார மற்றும் போஷணை நிலமைகளை கட்டியெழுப்பவும் நற்பழக்க வழக்கங்களை ஊக்குவிப்பதற்காகவும் மிகப்பெரிய வேலை திட்டங்கள் இத்தாய்மார் கழகத்தின் ஊடாக இடம்பெறுகின்றன. தாய்மார் கழக செயற்பாடுகளின் மூலமாக பிரதேசத்தின் சுகாதார சேவை ஊழியர்கள் மற்றும் சமூக தலைவர்களின் திறமைகளும் ஆக்கங்களும் வெளிப்படையாக காண்பது குறிப்பிடத்தக்க மகிழ்ச்சியாகும். மீளாய்வுக் கூட்ட நிகழ்ச்சிகளின் போது வெளியான வெற்றிகரமான செயற்பாடுகள் மற்றும் அனுபவங்களை கவனத்திற் கொள்ளும் போது அவர்களின் திறமைகளும் அர்ப்பணிப்புகளும் நன்றாக தெரிகின்றன. இம் மீளாய்வு கூட்டங்களுக்கு சமூக குழுக்கள் விடா முயற்சிகளுடன் கலந்து கொண்டார்கள். இங்கு தயாரிக்கப்பட்ட உணவுகள் பாரம்பரிய பிரதேச மூலப்பொருள்களினால் தயாரிக்கப்பட்ட சுவையும் போஷாக்கும் நிறைந்த உணவுகளாகும். அவர்களால் காட்சியளிக்கப்பட்ட மற்றும் வருமானங்கள் ஈட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட கைவேலைகளும் ஆக்கங்களும் எங்களை மென்மேலும் உற்சாகப்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளது. சுகாதார சேவையாளர்களின் உதவியுடன் சமூகத்தில் சுகாதாரம் மற்றும் போஷனையை மேம்படுத்துவதற்காக ஒட்டாவா கூற்றிற்கு( Ottawa Charter ) அமைய பொறுப்புக்களைச் சுமந்து தீர்மானங்களை எடுத்து சமூகத்தின் சுகாதார மேம்பாட்டிற்காக சமூகத்தை ஊக்கப்படுத்துதல் தாய்மார் கழகத்தின் ஓர் நோக்கமாகும்.

தாய்மார் கழக மற்றும் சமூக சுகாதார குழுக்களுக்கான வழிகாட்டி நூல் ஒன்றின் தேவை நீண்ட காலமாக காணப்பட்டது.

இச் சமூக குழுக்களின் மூலம் கடந்த வருடங்களில் நாடு பூராகவும் அமுலாக்கப்பட்ட செயற்பாடுகளில் இருந்து நல்ல முன்னேற்றம் காட்சியளிக்கப்பட்டாலும் இச் சமூக குழுக்கள் செயற்படுத்தும் செயற்பாடுகள் மேலும் முறைமைப்படுத்தும் தேவை ஏற்பட்டது.

அதற்கிணங்க சுகாதாரம் மற்றும் போஷணை மேம்படுத்தும் தேசிய குறிக்கோள்களுக்கு பொருத்தமான வகையில் இத்தாய்மார் குழுக்களின் செயற்பாடுகள் ஒன்றிணைத்தலுக்கும் வலுவூட்டுதலுக்காகவும் இவ் வழிகாட்டி நூல் வெளியாக்கப்பட்டது.

சுகாதார மேம்பாட்டில் உள்ள பொறுப்புக்கள் சுகாதாரத்திற்கும் அதற்கு அப்பாலும் நல்வாழ்வு மற்றும் சுகாதார வாழ்க்கை முறை ஏற்படுத்துவதற்கும் உறுதுணையாக அமையும்.

பிரதேச மற்றும் நேர்காணல் சுகாதார பிரிவுடன் செய்த கலந்துரையாடலின் போது வெளியான விடயங்களையும் மீளாய்வுகளின் போது கிடைத்த வரவேற்புகளையும் கவனத்திற் கொண்டு இவ்வழிகாட்டி தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டி வெளியாக்குவதை இட்டு சுகாதார கல்வி பணியகம் மனப்பூர்வமாக பெருமை அடைவதுடன் இவ் வழிகாட்டியின் மூலம் இலங்கை சுகாதாரம் மற்றும் போஷாக்கு தரவுகளின் முன்னேற்றமும் சமூக ஊக்குவிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றன.

சமூக சுகாதார சேவையின் பல தரப்பட்ட குழுக்களின் ஒத்துழைப்பின் பிரதிபலனாகவே இவ் வழிகாட்டி நூல் வெளியாக்கப்பட்டது. குடும்ப சுகாதாரப் பணியகம், போஷணைப் பிரிவு, போஷணை ஒருங்கிணைப்புப் பிரிவு, தொற்றாநோய் பிரிவு, கொழும்பு பல்கலைகழகம் மற்றும் யுனிசெப் நிறுவனம் உடன் சுகாதார கல்விப் பணியகம் ஒத்துழைப்புடன் செயற்பட்டதினால் இவ் வழிகாட்டி நூல் வெளியாக்க முடிந்தது. நேர்காணல் மற்றும் பிரதேச பங்காளர்களான வைத்திய அதிகாரிகள், தாய் - சேய் நல வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார கல்வி அதிகாரிகள் மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பூரண பங்களிப்பு இத் தொகுப்புக்கு உதவியது.

இவ்வழிகாட்டி தொகுப்பிற்கு உதவிய சகல வளவாளர்களுக்கும், சுகாதார கல்வி பணியகம் தமது இதயப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது. சில மாவட்டங்களில் நடாத்தப்பட்ட மீளாய்வு கூட்டங்களின் போது கிடைத்த பிரதி பலிப்புகள் மற்றும் கருத்துக்களை தெரிவித்த சகலருக்கும் சுகாதார கல்வி பணியகம் தமது இதயப் பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது. இவ் வேலைத்திட்டத்திற்கு வழிகாட்டி நூல் ஒன்று தொகுத்தலுக்கு நிதி உதவி வழங்கிய யுனிசெப் நிறுவனத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

**வைத்திய நிபுணர் அமல் ஹர்ஷ டீ சில்வா**
பணிப்பாளர்
சுகாதார கல்விப் பணியகம்.

**வைத்திய நிபுணர் R.D.F.C. காந்தி**
பிரதி பணிப்பாளர்
சுகாதார கல்விப் பணியகம்.

**மருத்துவ நிபுணர் A.S.L. அமந்தி பந்துசேன**
சமூக வைத்திய நிபுணர்
சுகாதார கல்விப் பணியகம்.

## புதிய பதிப்புக்கான முன்னுரை

சமூக சுகாதார மற்றும் போஷணை நிலையை மேம்படுத்த மக்கள் மத்தியில் எதிர்பார்க்கும் ஆரோக்கியமான நடத்தை மற்றும் பழக்கங்களை ஏற்படுத்துவது முதன்மை காரணியாகும். அதில் சுகாதார மேம்பாட்டு பணியகம் ஊடாக மேற்கொள்ளும் சமூக உயிர்ப்பிக்கும் செயன்முறைக்கு தாய்மார் கழகத்தினால் கிடைக்கும் பங்களிப்பு மிக மேலானதாகும். சமூக பங்களிப்பு, சமூக ஊக்குவிப்புகளின் மூலம் அடித்தள மட்டத்திலுள்ள பல தரப்பட்ட சுகாதார மற்றும் போஷணை சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உறுதுணையாக உள்ளது. சமூகத்திற்கு தமது சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளை சுயமாகவே தீர்த்துக்கொள்வதற்கு ஊக்குவிப்பு மற்றும் கட்டாயப்படுத்தல் மிக முக்கியமானதாகும். தாய்மார் கழகத்தின் உறுப்பினர்களுக்கு சுகாதார தகவல்களை பெற்றுக் கொள்ளுதல், அனுபவங்களை பரிமாறுதல் மற்றும் அறிவூட்டல்களின் மூலம் சிறந்த சுகாதார பழக்கங்களை மேம்படுத்துதல் போன்ற விடயங்களுக்கு சுகாதார ஊழியர்கள் மூலம் வழிகாட்டல் கிடைக்கின்றன. சமூகத்தின் போஷணை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இயங்கி வரும் பொது சுகாதார சேவைகளுக்கும் மேலதிக உதவி இத்தாய்மார் கழகங்கள் மூலம் கிடைக்கின்றன.

தாய்மார் கழகங்களை பலப்படுத்துவதும், சீர்ப்படுத்துவதும் மற்றும் அதிகப்படுத்தலையும் நோக்கமாக கொண்டு தேசிய மட்டத்தின் நிபுணத்துவ அறிவுடன், கழகமட்டத்தின் கருத்துக்களை பெற்று தாய்மார்கழகத்திற்கு வழிகாட்டியொன்று 2015 ஆம் ஆண்டு வெளியாக்கப்பட்டது. அடி மட்டத்தில் அமுலில் உள்ள தாய்மார் கழகங்களை மேலும் பலப்படுத்தவும் புதுத்தாய்மார் கழகங்கள் உருவாக்குவதற்கும் மாவட்ட ரீதியாக தாய் - சேய் நல வைத்திய அதிகாரிகள், சுகாதார கல்வி அதிகாரிகள் போன்று சுகாதார வைத்திய அதிகார பிரிவு ரீதியாக சுகாதார வைத்திய அதிகாரிகள், மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கு வசதிகள் பல பெறுவதற்கு இவ்வழிகாட்டி துணையாக இருக்கும்.

தேசிய மட்ட பங்காளர்களான சுகாதார அமைச்சுடன் இணைந்து செயற்படும் பல நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் வைத்திய நிபுணர்களின் நவீன தொழிநுட்ப அறிவுகளை பெறுவதற்கும் கழ ஊழியர்களின் அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கும் நடாத்தப்பட்ட கூட்டங்களின் பிரதிபலனாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் இத்தாய்மார் கழக வழிகாட்டியின் புதுத்தொகுப்பு வெளியாக்கப்படுகின்றன. இலங்கை நாட்டில் தாய்மார் கழகங்கள் பயணித்து வந்த நீண்ட பயணத்தின் முக்கிய விடயமொன்றை பதிவதற்கு இவ் வழிகாட்டியின் புதுத்தொகுப்புக்கு இயலும். இவ்வழிகாட்டி மூலம் தாய்மார் கழக நிகழ்ச்சிகள் மேலும் பலமாகி சிறந்த நீண்ட பயணம் ஒன்று செல்வதை எதிர் பார்ப்பதோடு இதற்குதவிய சகல பங்காளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வைத்திய நிபுணர் பபா பளிஹவடண**
பணிப்பாளர்
சுகாதார மேம்பாட்டுப் பணியகம்.

## அறிமுகம்

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் தாய் சேய் நல உட்பட சுகாதார துறையில் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. எனினும் பல்வேறுப்பட்ட காரணங்களினால் போஷணை விடயத்தில் வெற்றியை காணமுடியாமை கவனத்திற்கொள்ள வேண்டிய விடயமாகும். தவறான உணவு பழக்க வழக்கங்கள் மூலம் சமூகத்தில் மந்த போஷணை காணப்படுவது போல் தற்போது தொற்றாநோய்களுக்கு உறுதுணையாக இருக்கும் அதிபோஷணை மற்றும் அதி உயர்நிலை பிரச்சினையாக காணப்படுகின்றது. மேற்கூறப்பட்ட மந்த போஷணை மற்றும் அதிபோஷணை சமூகத்தில் பல்வேறுப்பட்ட நோய்களுக்கு காரணமாக அமைவதோடு சமூக பொருளாதார சிக்கல்களையும் ஏற்படுத்தும். மேலும் பொது சுகாதார மற்றும் அதனோடு இணைந்த ஏனைய பிரச்சினைகளுக்கு காரணமாக நோய் விகிதாசாரம் மற்றும் மரண விகிதாசாரம் மேலோங்கி செல்வதற்கு காரணமாக அமைந்திருப்பதால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு சமூக ஒத்துழைப்பு முக்கியமானதாக காணப்படுகின்றது. சமூக வலுவூட்டல் மற்றும் உயிர்ப்பித்தல் மூலமாக சமூக மக்களுக்கு தமது சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளின் தலைமைத்துவத்தை அளிப்பதன் மூலம் பலதரப்பட்ட சுகாதார பிரச்சினைகளை சுயமாக தீர்த்துக் கொள்ள முடியும். குடும்பத்தின் சுகாதார மற்றும் போஷணையை மேம்படுத்துவதற்கு சமூக வலுவூட்டலும் உயிர்ப்பித்தலும் பேருதவியாக அமைகின்றது. இதில் ஒன்றிணைந்து செயற்படுதல் பிரதான இடம் வகிக்கின்றது.

சமூகத்தில் சுகாதார மற்றும் போஷணையை மேம்படுத்துவதற்காக நேரடியாகவும் (குறைநிறை பிள்ளைகளின் நிறையை மேம்படுத்தல், அதிக நிறை மற்றும் அதி உயர் நிறையை குறைத்தல், நுளம்பு பெருகும் இடங்களை குறைப்பதன் மூலம் டெங்கு போன்ற நோய்களை குறைத்தல் போன்ற) மறைமுகமாகவும் (பாதுகாப்பான சுற்றுப்புற சூழல் மற்றும் வருமான முகாமைத்துவம் போன்ற) தாக்கம் ஏற்படுத்துவதை முன்னிட்டு மாபெரும் அரங்கமொன்று தாய்மார் கழகம் மற்றும் சமூக உதவிக் குழுக்கள் மூலம் நடாத்தப்படுகின்றமைக்கான சான்றுகள் நிறைய கிடைக்கின்றன.

### தாய்மார் கழகம் என்றால் என்ன?

தாய்மார் கழகங்கள் அல்லது சமுதாய உதவிக் குழுக்கள் ஏறத்தாழ 5 தொடக்கம் 20 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவாகும். இவர்கள் ஒட்டுமொத்தமாக செயற்பட்டு தமது பிரதேசத்திற்கு பொருத்தமான ஆரோக்கியம் மற்றும் போஷாக்கு சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதோடு நடைமுறைப் பழக்க வழக்கங்களையும் மேம்படுத்திக் கொள்ள உதவுகின்றனர். இக்குழுவின் அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து நற்பழக்க வழக்கங்கள் மற்றும் அறிவை மேம்படுத்திக் கொண்டு சமுதாயத்தின் போஷாக்கு மற்றும் ஆரோக்கிய நிலைகளை மேம்படுத்துவதற்காக துணை புரிகின்றனர். 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகள் உள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கி தாய்மார் கழக உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படும்.

**சுய சுகாதார மற்றும் போஷாக்கு நிலையை மேம்படுத்துவதற்காக சமூகத்தில் இருந்தே உற்சாகமான பங்களிப்பை பெற்றுக்கொண்டு தமது சுகாதாரத்திற்கு தாமே பொறுப்புதாரியாக ஆகுவது தாய்மார் கழகங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.**

## பின்னணி

1950 ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக இயங்கி வந்த தாய்மார் கழகத்தின் நீண்ட பயணத்தில் 1990 ஆம் ஆண்டு ஆகையில் 40 நாடுகளுக்கு அதிகமாக ஏறத்தாழ 70,000ம் பேருக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு உரிமை கூறி சுகாதார மேம்பாட்டு விடயங்களில் ஈடுபடுவதற்கு உலகம் பூராகவும் காணப்படும் தாய்மார் கழகங்களுக்கு இடம் கிடைத்துள்ளது. அனுபவமிக்க தாயிடமிருந்து புதியத் தாய்க்கு உபகாரம் என்ற கூற்றை முன்வைத்து உலகளாவிய ரீதியில் பல நாடுகள் தாய்மார் கழகங்களை உருவாக்கியுள்ளது.

### இலங்கையில் தாய்மார் கழகம் உருவாகிய சரித்திரம்

2002 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மாவட்ட சூரியவெவ சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமை மற்றும் அனுசரணையின் கீழ் சுகாதார கல்வி அதிகாரி திரு. புத்ததாச அமரசிங்ஹ ஐயா அவர்களின் வழிகாட்டலின் பிரகாரம் இலங்கையில் முதன் முதலாக தாய்மார் கழகம் உருவாக்கப்பட்டது.



## நோக்கங்கள்

### தாய்மார் கழகத்தின் பிரதான நோக்கம்

பிரதேச ரீதியாக சமூக ஊக்குவிப்பு மற்றும் சமூக உயிரூட்டலின் மூலம் சமூகத்தில் சுகாதார மற்றும் போஷாக்கு சம்பந்தமான நற்பழக்க வழக்கங்களை மேம்ப்படுத்தல்.

### தாய்மார் கழகத்தின் விஷேட நோக்கங்கள்

1. சமூகத்தில் போஷாக்கு சம்பந்தமான நற் பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதற்கு சமூகத்தில் மாற்றுதலை உண்டாக்கும் திடகாத்திரமானவர்கள் ஊடாக தரமான மனப்பாங்கு மற்றும் நற்பழக்க வழக்கங்களை பரப்புதல்.

2. அறிவூட்டல் மற்றும் நற்பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்படுத்தி குடும்பத்தின் சுகாதார நிலைமையை மேம்படுத்தல்.

3. பிரதேச ரீதியாக சமூகத்தில் வருமானம் ஈட்டக்கூடிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி நிதி முகாமைத்துவத்திற்கு ஊக்கமளித்தல்.

4. மதுபானம், புகைத்தல் மற்றும் போதைவஸ்து பாவணையற்ற, வன்முறை அற்ற சூழலில் மகிழ்ச்சிகரமான குடும்பம் என்ற கூற்றை மேம்படுத்துதல்.

5. முன் பிள்ளை பருவ அபிவிருத்திக்கு உண்டான நற்பழக்கங்களை மேம்படுத்துதல்.

6. பிள்ளை அபிவிருத்தி மற்றும் இளம் பருவ பாதுகாப்பை முன்னிட்டு குடும்பத்தின் பிள்ளைகளை பராமரிப்பு விடயம் தொடர்பான திறன்களை மேம்படுத்துதல்.

7. பசுமைக் கூற்று ஊடாக சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கு துணைபுரிதல்.

8. சுகாதாரச் சேவை உத்தியோகத்தர்களின் அறிவூட்டலுக்கு இணங்க பிரதேச ரீதியாக சமூகத்தில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய சுகாதார தேவைகளை பற்றி அறிவூட்டச் செய்தல்.

## இலக்கு

- ஒவ்வொரு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கும் ஆகக்குறைந்தது ஒரு தாய்மார் கழகத்தையேனும் உருவாக்குதல்.
- பெருந்தோட்டப் பகுதிகளில், ஒரு பெருந்தோட்டப் பிரிவிற்கு ஒரு தாய்மார் கழகம் வீதம் உருவாக்குதல்.

ஒரு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு/ ஒரு பெருந்தோட்டப் பிரிவிற்கு தாய்மார் கழகங்கள் அதிகரிப்பதன் மூலம் இதை மேலும் விஸ்தரிக்க முடியும்.

ஏற்கனவே ஒரு தாய்மார் கழகம் வீதம் இயங்கும் ஒரு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு தமது சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில், பிரதேச நிலைமைகளை கருத்திற் கொண்டு கிராமத்திற்கு ஒன்று அல்லது தோட்டப்பிரிவிற்கு ஒன்று வீதம் இதை விரிவாக்க முடியும். இவ் இலக்கை அடைந்தவுடன் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்குமாக ஒரு தாய்மார் கழகம் வீதம் உருவாக்குவதற்கு திட்டமிடலாம்.

## சுகாதார வைத்திய அதிகார பிரிவொன்றில் தாய்மார் கழகம் ஒன்றை ஆரம்பித்தல்

பிரதேச ரீதியாக பல தரப்பட்ட சமூக ஊக்குவிப்பு குழுக்கள் பல பெயர்களில் நாட்டில் இயங்கி வருகின்றது. எனினும் சமூகத்தில் சுகாதார மற்றும் போஷாக்கு நிலைமையை கட்டியெழுப்புவதற்கு என இயங்கி வரும் இவ்வாறான பல தரப்பட்ட குழுக்களை பொதுவாக தாய்மார் கழகம் என இவ் வழிகாட்டலின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.



மாவட்டத்தில் தாய் - சேய் நல வைத்திய அதிகாரியும், சுகாதாரக் கல்வி உத்தியோகத்தருமாக இருவரும் சேர்ந்து தாய்மார் கழகங்கள் உருவாக்குவதும் அவைகளை முன்னேற்றுவதும், விஸ்தீரனப்படுத்துவதுமான பலதரப்பட்ட காரியங்களில் நேரான முறையில் வழிகாட்டுதல் வழங்கி பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரியுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு பிரதான அரங்கமொன்றை நிகழ்த்துவார்கள்.

பிரதேச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பொது சுகாதார பரிசோதகரின் உதவியுடன் சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கு இணங்க இத்தாய்மார் கழகங்களுக்கான வசதிகளை செய்து கொடுப்பர்.



குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர், பாடசாலை பற் சிகிச்சையாளர் உட்பட பிரதேச சுகாதார அதிகாரிகளின் அதிக வேலை மற்றும் வேலைப்பழுவின் முன்னால் சமூகத்தில் சுகாதார மற்றும் போஷாக்கு மேம்படுத்துதலுக்காக தாய்மார் கழகத்தினால் கிடைக்கும் பலன் இன்றியமையாதது.

விஷேடமாக சமூகத்தில் தாய்மார்களினதும் பிள்ளைகளினதும் சுகாதாரம் மற்றும் போஷணையை மேம்படுத்துவதற்கு இதன் மூலம் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. உணவுப்பாதுகாப்பு, நிதி முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பு போன்ற சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய ஏனைய பிரிவுகளுக்கும் தாய்மார் கழகங்கள் மூலம் பங்களிப்புகள் கிடைக்கின்றன. விவசாயம், சமூக நலன் மற்றும் சமூர்த்தி போன்ற ஏனைய நிறுவனங்களின் மூலமாக கழகத்திற்கான உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.



தாய்மார் கழகங்கள் ஆரம்பிக்கும் போதும் விஸ்தீரனப்படுத்தும் போதும் சுகாதார வைத்திய அதிகார பிரிவு ரீதியாக தலைமை கூட்டம் நடாத்த முடியும். இவ் விழிப்புணர்வு கூட்டங்களின் போது தாய்மார் கழகங்களின் சிறந்த கதைகள் மற்றும் செய்திகள் வெளிப்படுத்துவதினாலும் தாய்மார் கழகங்கள் ஊடாக சமூகம் பெற்ற வெற்றி மற்றும் நன்மைகளை எடுத்துக்காட்டுவதினாலும் சுகாதார சேவையாளர்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் வேலைப்பழுவை குறைத்துக் கொள்ளமுடியும். அதற்காக தாய்மார் கழகம் செயற்பட்ட விதங்களை எடுத்துக்காட்டுவதன் மூலம் மேலும் தாய்மார் கழகங்கள் உருவாக்குவது, முன்னேற்றுவது மற்றும் அதிகப்படுத்துவது போன்ற விடயங்களை மேற்கொள்ள முடியும்.

## தாய்மாா் கழகமொன்றில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்கள்

### 1. உறுப்பினர்களின் எண்ணிக்கை

- 5 தொடக்கம் 20 வரை உறுப்பினா்களை சேர்த்துக்கொள்ள முடியும்.
- ஒரு குழுவில் உறுப்பினா்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதனை பிரித்து இரண்டு குழுக்களாக அமைக்கலாம்.

ஒரு குழுவிற்கு அதிகமான உறுப்பினர்களை சேர்த்துக்கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவ்வாறு சேர்ப்பதால் குழுவிலுள்ள சகல உறுப்பினர்களுக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கும் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கும் உள்ள சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும்.

### 2. தாய்மாா் கழகத்தில் சிபாரிசு செய்யப்பட்ட அங்கத்தவா்களின் கூட்டு

1. **கா்ப்பிணித் தாய்மார்கள்**
2. **தாய்மாா்கள் (முக்கியமாக சிசுக்கள் மற்றும் சிறுவர்கள்)**
3. **தந்தைமாா்கள், கணவன்மார்கள், ஓய்வு பெற்ற நபர்கள்**
4. **தாத்தா, பாட்டி**
5. **சமுதாயத் தலைவா்கள்**
6. **பருவ வயதில் உள்ளவர்களும் இளைஞர்களும்**
7. **இவ் விடயம் சம்பந்தமாக ஆர்வம் உள்ள வேறு நபா்கள்**

பலதரப்பட்ட உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்ட தாய்மார் கழகம் அதிக நன்மை பெற்றுத்தரக் கூடியதாகும். இவ்விடயங்களுக்காக நேர்மையுடனும் உற்சாகத்துடனும் சுயலாபம் இன்றி அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு, சமூகத்தின் சுகாதாரம் மற்றும் போஷணையை கட்டி எழுப்புவதற்கு செயற்படக்கூடிய நபர்களை தேர்ந்தெடுப்பதால் எதிர்பார்க்கப்படும் பயனை அடைவதற்கு இலகுவாக இருக்கும்.

3. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், பிரதேச பொது சுகாதார பரிசோதகருடன் சேர்ந்து சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் அடித்தள தாய்மார் கழக குழுவை தெரிவு செய்ய வேண்டும். எனினும் இத் தாய்மார் கழகம் ஆரம்பித்த பின் சகல கூட்டங்களுக்கும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரின் கட்டாய பங்களிப்பை எதிர் பார்க்கப்படமாட்டாது. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரினால் குறிப்பிட்ட தாய்மார் கழகத்தின் நிலைமை மற்றும் பணிகள் பற்றி புரிந்துணர்வு பெற்றிருப்பது அவசியம். அத்துடன் சுகாதார சேவை அமைப்புடன் இணைப்பை ஏற்படுத்தி அக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களும் அதன் முன்னேற்றமும், பெற்றுக்கொண்ட வெற்றிகளும் மற்றும் பிரச்சினைகளையும் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

**தாய்மார் கழகத்தின் சகல உறுப்பினர்களும் அத்தாய்மார் குழுவிற்கு உத்வேகத்துடன் பங்களிப்பை வழங்குவார்கள்.**

தாய்மார் கழகம் எப்போதும் புதிய அங்கத்தவர்களுக்காக திறந்திருக்கப்பட வேண்டும். புதுக் கருத்துக்கள், ஆலோசணைகள் உடன் சிறந்த எண்ணங்களை கொண்ட உறுப்பினர்களாக இருத்தல் இங்கு மிக முக்கியமானதாகும்.

4. ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாவது உறுப்பினா்களின் கூட்டம் எதிர்பார்க்கப்படும்.

**ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாவது ஒன்று கூடும் தாய்மார் கழகம் செயற்படும் தாய்மார் கழகம் என கருதப்படும்.**

5. உறுப்பினர்கள் மத்தியில் தகவல்கள் மற்றும் அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கான மிகச்சிறந்த வாய்ப்பு இம்மாதாந்த கூட்டமாகும்.

6. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரின் வழிகாட்டலின் கீழ் பிரதேசத்திற்கு பொருத்தமான தன்னால் விளங்கிக் கொண்ட முக்கிய பிரச்சினைகளை கொண்டு கலந்துரையாட வேண்டிய தலைப்புகள் பற்றி உறுப்பினர்கள் தீர்மானிப்பார்கள்.

7. கூட்டம் நடாத்தும் நேரமும் இடமும்

**நேரம் :-** உறுப்பினர்களின் அன்றாட வேலைகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் நேரத்தை ஒதுக்கி கூட்டத்தை நடாத்த முடியும்.

**இடம்:-** கூட்டத்தை நடாத்துவதற்காக தெரிவு செய்யப்படும் இடம் பிள்ளைகளுடன் வரக்கூடியதாகவும் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு பாதுகாப்பானதாகவும் அமைய வேண்டும்.

**எளிதில் அணுகக்கூடிய வசதி:-** தெரிவு செய்யப்படும் இடம் எளிதில் அணுகக்கூடியதும், கூட்டத்திற்கு பொருத்தமானதுமான சமூக மண்டபம், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், மதஸ்தலங்கள் அல்லது பாடசாலை போன்ற மிக எளிதான இடமொன்றாக இருத்தல் வேண்டும்.

8. குழுக்களினால் மேற்கொள்ளும் செயற்திட்டம் மற்றும் கூட்டங்களுக்கு சமூகமளிக்கும் உறுப்பினர்களுக்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது. தாய்மார் கழகம் என்பது சமூகத்தில் சுகாதார தகவல்கள் பரிமாற்றலுக்காகவும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் உதவ சுயவிருப்பத்துடன் முன்வருபவர்களால் அமைக்கப்பட்ட குழுவாகுவதால் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை.

## தாய்மார் கழக அங்கத்தவர்களின் பொறுப்புக்கள்

### பொதுவான பொறுப்புக்கள்

- கூட்டத்தில் பரிமாறிக் கொண்ட எந்தவொரு தனிப்பட்ட அனுபவங்களையோ உணர்வுபூர்வமான விடயங்களையோ குழுவிற்கு வெளியில் கலந்துரையாடுவதை தவிர்த்தல்.

- ஒவ்வொரு உறுப்பினருக்கும் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கும், ஆலோசணைகளை கூறுவதற்கும், சுகாதாரத்திற்கான முக்கிய செயற்பாடுகள் அல்லது தலைப்புகள் பற்றி ஆலோசணை வழங்குவதற்கும் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பு உள்ளது.

- விவாதங்களின் போது எவரும் தமது ஆதிக்கத்தை செலுத்தாமல் இருப்பது.
- ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதை வைத்திருத்தல்.
- ஒவ்வொரு உறுப்பினரும் கழகத்தில் இருந்து தமக்கு தேவைப்படும் உதவியை தெரிவிக்கலாம். உதாரணமாக அறிவுரை, ஒத்துழைப்பு, தகவல்கள் மற்றும் கருத்துக்களை செவிமடுத்தல் போன்ற தேவைகளை இனங்கண்டு செயற்படுத்தல்.
- ஒவ்வொரு நபருக்கும் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு உரிமை இருப்பது போன்று மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செவிமடுப்பது தனக்கு உள்ள கடமை என்பதை கருத்திற் கொள்ளல்.
- சமூகத்தில் சுகாதார மேம்பாட்டு விடயமாக மாற்றத்தை ஏற்படுத்தும் நபராக செயற்படுதல்.
- தாய்மார் கழகத்தின் அங்கத்தவர்கள் குடும்பத்தில் மற்றும் சமூகத்தில் சுகாதாரத் தகவல்கள் பரிமாறும் விதத்தில் செயற்படுதல்.

- **குழு மூலமாகவே ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்ட தலைமைத்துவத்துடனும் நேர்மையுடனும் பணியாற்றக்கூடிய தலைவர் ஒருவரின் கீழ் தாய்மார் கழகத்தை கொண்டு செல்ல முடியும்.**
- **சங்க குறிப்புகளை பதிவதற்காக செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.**
- **வருமானமீட்டும் செயற்திட்டம் மற்றும் நடவடிக்கைகளின் மூலம் கிடைக்கப்படும் நிதியை முகாமைத்துவம் செய்வதற்கு பொருளாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.**
- **அங்கத்தவர்கள் ஒருவரை ஒருவர் நேராகப் பார்க்க கூடியவாறு வட்டமாக சங்கத்தின் கதிரைகளை அமைக்க வேண்டும்.**
- **தாய் மார் கழகத்தில் சுகாதார அதிகாரி ஒருவர் அங்கத்தவராக இருப்பது கட்டாயமில்லை.**

**தாய்மார் கழகத் தலைவரின் பொறுப்புக்கள்**

- கூட்டம் நடாத்தப்படுவதற்குரிய இடம், திகதி, நேரம் என்பவற்றைத் தீர்மாணித்தல்.
- குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், பொது சுகாதாரப் பரிசோதகர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய தலைப்புகளை முடிவு செய்தல்.
- குழு அங்கத்தவர்களுக்கு கூட்டத்திற்காக அழைப்பு விடுத்தல்.
- குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஒத்துழைப்புடன் தாய்மார் கழகத்தை வழுவூட்டுதல்.
- குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் இணைப்புடன் தாய்மார் கழகத்தின் மூலம் செயற்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் பற்றி அவர்களுக்கு தெளிவுப்படுத்துதல்.
- ஏனைய பங்காளர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் ஒத்துழைப்புடன் எதிர்கால அங்கத்தவர்களை இணங்கண்டு கொள்ளுதல்.

**தாய்மார் கழக செயலாளரின் பொறுப்புகள்**

- கூட்டறிக்கை தயாரித்தலும் பராமரித்தலும்.
- கடந்த கூட்டறிக்கையை எதிர் வரும் கூட்டத்தல் சமர்ப்பித்தல்.
- செயலாளர் படிவம் A (இணைப்பு 2) மூலம் செயற்பாடுகளின் தகவல்களை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு கையளித்தல்.
- முதல் கூட்டத்தில் அங்கத்தவர்களின் தகவல்களையும் புதிய அங்கத்தவர்கள் சேர்ந்த பின் அவர்களின் தகவல்களையும் சேர்த்து பராமரித்தல்.

**தாய்மார் கழக பொருளாளரின் பொறுப்புகள்**

- கணக்கறிக்கை முகாமைத்துவமும் பராமரித்தலும்

## சுகாதார ஊழியர்களின் பொறுப்புகள்

**(1). தாய்மார் கழகமொன்று ஆரம்பித்தல்**

சுகாதார வைத்திய அதிகாரியின் தொழிநுட்ப வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மூலம் தமது பிரிவில் தாய்மார் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கு அனுமதி வழங்கலாம். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் மேற்பார்வை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், பொது சுகாதார தாதி போன்ற சுகாதார வைத்திய அதிகார பிரிவு ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் அதிகாரிகளினது மேலதிக அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம்.

**(2). தாய்மார் கழகமொன்றை பலப்படுத்துவதற்காக வழிகாட்டி மற்றும் உதவியை நாடுதல்**

தாய்மார் கழகமொன்றை உருவாக்குவதற்கு தேவைப்படும் வழிகாட்டியை வழங்கி தலைமை செயலை நிகழ்த்த மாவட்ட தாய் - சேய் நல வைத்திய அதிகாரி, சுகாதார கல்வி அதிகாரி மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியை பெற வேண்டும்.

மேலதிக அறிவுரைகள் மற்றும் உதவிகள் மாவட்ட மற்றும் மாகாண ரீதியான தொழிநுட்ப அதிகாரிகளாக செயற்படும் சமூக வைத்திய நிபுணர்கள், தொற்றா நோய் வைத்திய அதிகாரி மற்றும் பிரதேச மேற்பார்வை பொது சுகாதார தாதி ஆகியோர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதாரத்திற்கு நேரடியாகவே பொருந்தக் கூடிய, பொருந்தாத பல தரப்பட்ட பங்காளர்களுடன் செயற்பட்டு வசதிகள் செய்து கொடுத்தல் பொது சுகாதார பரிசோதகரின் உதவியுடன் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டும்.

தாய் - சேய் நல வைத்திய அதிகாரி, சுகாதார கல்வி அதிகாரி மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியுடன் நிகழ்ச்சிகளை அமுல்படுத்துவதன் மூலம் பிரதேசத்தில் மேலும் அதிகமான தாய்மார் கழகங்களை உருவாக்க முடியும்.

**(3). பயிற்சிகள்**

தேசிய மட்டத்தில் முக்கியமான நிகழ்ச்சிகளை மையமாக கொண்டு சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மூலம் தாய்மார் கழகத்தின் ஒரு அங்கத்தவரையேனும் பயிற்றுவிக்க வேண்டும். அவ் அங்கத்தவர்களுக்கு தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துதல், பிரச்சினைகளுக்கான தீர்வுகளை காணுதல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும் விதமாக இப்பயிற்சி அமைய வேண்டும்.

சகல உறுப்பினர்களுக்கும் பயிற்சி பெறுவதற்கான மற்றும் செயற்பாடுகள் நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி ஒவ்வொருவரையும் பல தலைப்புகளின் கீழ் பயிற்றுவித்தல். அவ்வாறு பயிற்சி பெற்ற உறுப்பினர் குறிப்பிட்ட தலைப்பின் கீழ் குழுத் தலைவராக செயற்பட்டு அதற்கு பொருத்தமான கலந்துரையாடல், செயற்பாடுகளை நிகழ்த்துவதற்கு உரிய வசதி வாய்ப்புகளை செய்து கொடுக்க வேண்டும். தேவைப்படும் சந்தர்ப்பங்களில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருடைய அறிவுரை மற்றும் இவ்வழிகாட்டி நூலையும் பெற்றுக்கொள்ளலாம். பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு கழத்தில் 5 முதல் 10 வரையிலான வீடுகளை ஒப்படைத்து அச்சமூகத்தின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை முறையினை உருவாக்குவதற்கான பொறுப்பை வழங்கலாம்.

ஆண்கள் உறுப்பினராக உள்ள கழகங்களில் ஆகக்குறைந்தது ஒரு ஆண் உறுப்பினரையாவது குறிப்பிட்ட தலைப்புகளை பற்றி பயிற்சி பெறச் செய்திருத்தல் அவசியமாகும். இதனால் குடும்பத்தில் சுகாதாரத்தை மேம்படுத்த ஆண்களின் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளலாம்.

**(4). தாய்மார் கழகத்தின் வளர்ச்சியை கண்காணித்தலும் மதிப்பிடுதலும்**

தாய்மார் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை கண்காணித்தல் படிவம் B (இணைப்பு 3) மூலம் சுகாதார வைத்திய அதிகாரி தனது மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்து கலந்தாலோசித்தல் வேண்டும்.

கழ உத்தியோகத்தர்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் தரவுகள் மற்றும் குறிகாட்டிகளை மையமாக கொண்டு [ (செயற்திறன் குறிகாட்டிகள் (Process Indicators), வெளியீட்டு குறிகாட்டிகள் (Output Indicators) மற்றும் முடிவுக் குறிகாட்டிகள் (Outcome Indicators)] முன்னேற்றம் மற்றும் மதீப்பீட்டை அறிந்து கொள்வதோடு, மாகாண ரீதியாக நடாத்தப்படும் முன்னேற்ற ஆய்வு கூட்டங்களின் போது தாய்மார் கழக செயற்பாடுகளை பற்றி மதிப்பீடு செய்யப்படும்.

தாய் - சேய் நல வைத்திய அதிகாரியும், சுகாதாரக் கல்வி அதிகாரியும் தத்தமது மாவட்டத்திலுள்ள தாய்மாா் கழகங்களின் நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றம் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் மாதாந்தக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதன் மூலமோ, சுகாதார வைத்திய அதிகாரியினால் நிரப்பப்பட்ட கழக முன்னேற்றம் பற்றிய படிவங்களை மீளாய்வு செய்வதன் மூலமோ மீளாய்வு கூட்டங்கள் நடாத்துவதன் மூலமோ தாய்மார் கழகங்களின் முன்னேற்றங்களை பற்றி கண்டறியலாம்.

தாய்மார் கழகங்களின் ஒழுங்குமுறையையும் முன்னேற்றத்தையும் ஆராய்ந்து பார்ப்பதற்காக கழத்தில் 3 படிவங்கள் பயன்படுத்தப்படும். ஆவையாவன

**படிவம் A :-** மாதாந்தம் கழுவின் செயலாளர்/ தலைவரினால் நிரப்பப்பட்டு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு கையளிக்க வேண்டும்.

**படிவம் B :-** மாதாந்தம் குடும்ப சுகாதார உத்தியோகத்தரினால் பூரணப்படுத்தப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரிக்கு சமர்பித்தல் வேண்டும்.

**படிவம் C :-** தவணைக்கு ஒரு முறை சுகாதார வைத்திய அதிகாரியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

**படிவம் A (இணைப்பு 2)**

கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்ட தலைப்புக்கள், முடிவுக்கு கொண்டு வந்த செயற்பாடுகள், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பெற்றுக் கொண்ட வெற்றிகள் யாவற்றையும் உள்ளடக்கிய விதமாக குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு எழுத்துருவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்படிவத்தை பூரணப்படுத்துவதில் இடர்பாடுகள் யாதேனும் ஏற்பட்டால் அதை பற்றிய தகவல்களை குறிப்பிட்ட மாதத்தில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும்.

பிரதேச பொது சுகாதார பரிசோதகருடன் தொடர்புபட்ட விடயங்கள் ஏதும் கலந்துரையாடப்பட்டால் அல்லது செயற்பாடுகளுக்கு சம்பந்தப்பட்டால் அதை பற்றிய அறிக்கையை பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்க வேண்டும். (உதாரணம் :- சூழல் தொடர்பான சுகாதாரம் குப்பை முகாமைத்துவம் நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்தல்) அத்துடன் பற்சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டால் அது பற்றிய தகவல்களை பாடசாலை பற்சுகாதார சிகிச்சையாளருடன் கலந்துரையாடப்பட வேண்டும்.

**படிவம் B (இணைப்பு 3)**

தாய்மார் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் மற்றும் வெற்றிகளை சாராம்சப்படுத்தி படிவத்தை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரினால் பூரணப்படுத்தி சுகாதார வைத்திய அதிகாரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இப் படிவங்களை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பெற்றுக் கொள்ளலாம். சகல தாய்மார் கழக கூட்டங்களுக்கும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரின் பங்களிப்பை எதிர்பார்க்காவிடினும் இவர்கள் மூலம் வசதிகளை பெற்றுக் கொள்ளும் தாய்மார் கழகம்/ கழங்களின் செயற்பாடுகள் மற்றும் அதன் வெற்றிகள் பற்றி இவர் அறிந்திருத்தல் வேண்டும்.

**படிவம் C (இணைப்பு 4)**

தாய்மார் கழகத்தின் செயற்பாடுகள் பற்றிய விடயங்களை தவணைக்கொரு முறை நிரப்பி சுகாதார வைத்திய அதிகாரியினால் C படிவத்தின் மூலம் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சுகாதார கல்வி அதிகாரி, கீழ் குறிப்பிடப்படும் சகல தகவல் மற்றும் தரவுகளை மாவட்ட தரவுகளாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களிலிருந்து சேகரிக்க வேண்டும்.

1. மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை.
2. மாவட்டத்தில் இயங்கி வரும் தாய்மாா் கழகங்களின் எண்ணிக்கை.
3. வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு தாய்மாா் கழகத்திலேனும் அனைத்து குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களும் (100%) உள்ளடங்கி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.
4. வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு தாய்மாா் கழகத்திலேனும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களில் (90%)க்கும் மேலதிகமாக உள்ளடங்கி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.
5. வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு தாய்மாா் கழகத்திலேனும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களில் (75%) க்கும் மேலதிகமாக உள்ளடங்கி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.
6. வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு தாய்மாா் கழகத்திலேனும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களில் (50%) அல்லது அதற்கும் மேலதிகமாக உள்ளடங்கி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.
7. வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு தாய்மாா் கழகத்திலேனும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களில் (50%) அல்லது அதற்கும் குறைவாக உள்ளடங்கி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.
8. ஒரு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு உள்ள தாய்மாா் கழகங்களின் சராசரி.

9. மாவட்டத்தில் தாய்மார் கழகங்கள் மூலம் அடைந்த சாதனைகளின் தொகுப்பு (பிரதானமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களில் ஆரம்ப கட்டத்திற்கு அமைய அடைந்த முன்னேற்றத்தின் சதவீதம்.)

10. மேற்குறிப்பிட்ட தரவுகளை மையமாகக் கொண்டு பார்க்கையில் மாவட்டத்தில் சிறப்பாக இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு.

குடும்ப சுகாதார பணியகத்திற்கு சமர்பிக்கும் வருடாந்த தரவுப் படிவம் (இணைப்பு 5) மூலம் தேசிய ரீதியான தாய்மார் கழக கணிப்பீடுகளுக்கான தகவல்கள் வழங்கப்படும். மேலும் சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் மாவட்ட/ மாகாண ரீதியாக வருடாந்தம் நடாத்தும் மீளாய்வு கூட்டங்களின் மூலமாகவும் இதற்கு உதவி கிடைக்கும். சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட தாய்மார் கழக கணிப்பீடு படிவத்தை (இணைப்பு 6) மையமாகக் கொண்டு உயர் மட்டத்தில் செயற்படும் தாய்மார் கழகங்களை தேசிய ரீதியில் பாராட்டப்படும்.

**தாய்மார் கழகங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதை மதிப்பீடு செய்ய முன்னேற்ற அளவுகோல்கள் உதவுகின்றன. செயற்திறன் குறிகாட்டிகள் (Process Indicators), வெளியீட்டுக் குறிகாட்டிகள் (Output Indicators) மற்றும் முடிவுக் குறிகாட்டிகள் (Outcome Indicators) போன்ற அனைத்தும் இங்கு எதிர் பார்க்கப்படுகின்றன.**

ஆரம்பக் கட்டத்தில் தாய்மார் கழகத்தின் முன்னேற்றத்தை காண்பதற்காக செயற்திறன் குறிக்காட்டிகளும் சில சந்தர்ப்பங்களில் வெளியீட்டுக் குறிக்காட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

முடிவுக் குறிகாட்டிகளுக்காக பல காலங்கள் செல்லலாம். இவ் முடிவுக் குறிகாட்டிகள் மாவட்டத்தில் மற்றும் சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளின் முன்னேற்றத்தை வரிசைப்படுத்துவதற்கு சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் தாய் - சேய் நல வைத்திய அதிகாரிகளுக்கும் மற்றும் சுகாதார கல்வி அதிகாரிக்கும் உறுதுணையாக அமைகின்றது. இவ் அனைத்து தரவுகளையும் குறிப்பிட்ட படிவங்கள் மூலம் சுகாதார பணியகத்திற்கு நேரடியாக கிடைக்காவிடினும் மேற்குறிப்பிட்ட குறிகாட்டிகள் மூலம் பெற்றுள்ள முன்னேற்றத்தை மாவட்ட அல்லது மாகாண முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக பயன்படுத்தக்கூடிய குறிகாட்டிகள் பின்வருமாறு.

**சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியில் செயற்திறன் குறிகாட்டிகளை அளவிடுவதற்கான அளவு கோல்கள்:**

1. ஆகக் குறைந்தது ஒரு செயற்படும் தாய்மார் கழகமேனும் உள்ள குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சதவீதம்.

2. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் ஒருவருக்கு உள்ள தாய்மார் கழகங்களின் சராசரி.

3. சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் தாய்மார் கழக வழிகாட்டியை வாசித்துள்ள தொழிநுட்ப அதிகாரிகளின் சதவீதம்.

4. நிகழ்ச்சி திட்டத்தின் படி தாய்மார் கழகங்களின் முன்னேற்றத்தை கலந்துரையாடி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி மாதாந்த கூட்டங்களின் சதவீதம்.

5. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவொன்றிலுள்ள செயற்படும் தாய்மார் கழகங்களின் சதவீதம்.

6. ஆகக் குறைந்தது 3 தாய்மார் கழகங்களேனும் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.

*இக்குறிகாட்டிகள் சுகாதார அமைச்சினால் எந்தவித கொடுப்பனவும் வழங்கப்படாத குறிகாட்டிகளாக (Non DLI) தேசிய ரீதியில் முக்கியத்துவம் வகிக்கின்றது.*

**சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியில் வெளியீட்டு குறிகாட்டிகளை அளவிடுவதற்கான அளவு கோள்கள்:**

**ஆய்வுகள் மூலம் பெறப்படும் தரவுகள்:**

1. கடந்த 3 மாத காலப்பகுதியில் போஷாக்கு மேம்பாட்டு விடயமாக ஆகக்குறைந்தது ஒரு தலைப்பின் கீழாவது கலந்துரையாடல்களை மேற்கொண்ட தாய்மார் கழகங்களின் சதவீதம்.

2. கடந்த 3 மாத காலப்பகுதியில் போஷாக்கைத் தவிர ஆரோக்கியம் மேம்பாட்டு விடயமாக ஆகக்குறைந்தது ஒரு தலைப்பின் கீழாவது கலந்துரையாடல்களை மேற்கொண்ட தாய்மார் கழகங்களின் சதவீதம்.

3. ஆகக் குறைந்தது ஒரு நபராவது தொழிநுட்ப திறன்களில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்ற குழுக்களின் சதவீதம்.

4. ஆகக் குறைந்தது ஒரு ஆண் உறுப்பினராவது உள்ள குழுக்களின் சதவீதம்.

5. ஆண்கள் உள்ள குழுக்களில் ஆகக் குறைந்தது ஒரு ஆண் உறுப்பினரையாவது தாய்-சேய் நல சுகாதாரம் சம்பந்தப்பட்ட தொழிநுட்ப செயற்றிட்டங்களில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்ற குழுக்களின் சதவீதம். (உதாரணம் :- குழந்தைகளுக்கு மேலதிக உணவு வழங்குதல்)

6. ஆண்கள் உள்ள குழுக்களில் ஆகக் குறைந்தது ஒரு ஆண் உறுப்பினரையாவது தொடர்பாடல் திறன்களில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்ற குழுக்களின் சதவீதம்.

7. மாவட்டத்தில் தாய்மார் கழகம் மூலம் வருமானம் ஈட்டும் வழிகள் அல்லது முகாமைத்துவ செயற்றிட்டங்கள் பற்றிய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளின் சதவீதம்.

8. மாவட்டத்தில் தாய்மார் கழகம் மூலம் புகையிலை மற்றும் போதைவஸ்து பாவனையை குறைப்பதற்கு ஒரு செயற்திட்டத்தையேனும் அமுல் படுத்தி இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சதவீதம்.

**சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியில் முடிவுக் குறிகாட்டிகளை அளவிடுவதற்கான அளவு கோள்கள் :**

1. தாய்ப்பால் மட்டும் வழங்கப்படும் குழந்தைகளின் சதவீதம் (ஆய்வுகளின் மூலம்)

   06 மாதங்கள் பூர்த்தியாகும் போது

   05 மாதங்கள் பூர்த்தியாகும் போது

   04 மாதங்கள் பூர்த்தியாகும் போது

2. 07 மாதங்கள் பூர்த்தியாகும் குழந்தைகளின் உணவிற்கு நாளாந்தம் இறைச்சி, மீன் போன்ற உணவுகளை சேர்க்கின்ற தாய்மார்களின் சதவீதம் (ஆய்வுகளின் மூலம்)

3. தாய்மார் கழகங்கள் தொடங்கியதிலிருந்து வருடா வருடம் சுகாதார மற்றும் போஷணை அளவுக் கோல்களின் மாற்றத்தின் சதவீதம்.

   உதாரணம் : 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் குறைநிறை

   குறைந்த உடற்சுட்டித் திணிவு (டீஆஐ) உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை / சதவீதம்.

   குறைந்த உடற்சுட்டித் திணிவு (டீஆஐ) உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை / சதவீதம்.

   அதிக உடற்சுட்டித் திணிவு (டீஆஐ) உள்ள வயதுவந்தவர்களின் எண்ணிக்கை / சதவீதம்.

4. முதல் 3 மாதத்திற்குள் குறித்த டீஆஐ உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம்.

5. 40 வயதாகும் போது குறித்த டீஆஐ உள்ள பெண்களின் சதவீதம்.

6. சுகாதார முறைப்படியிலான கழிவறைகள் உள்ள வீடுகளின் சதவீதம்.

7. குருதிச்சோகையுள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம்.

8. குழந்தை அறை அல்லது பிள்ளைகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் ஒன்று உள்ள வீடுகளின் சதவீதம்.

9. வீட்டுத்தோட்டங்கள் உள்ள வீடுகளின் சதவீதம்.

10. நவீன குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய தகுதியுடைய குடும்பங்களின் சதவீதம்.

11. சென்ற வருடங்களில் பதிவு செய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை.

12. நுளம்பு குடம்பிகள் உள்ள வீடுகளின் சதவீதம்.

**(5). தாய்மார் கழகங்களின் விடயங்களை மீளாய்வு செய்தல்.**





தாய்மார் கழக விடயங்களை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ரீதியாகவும், மாவட்ட அல்லது மாகாண ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் மீளாய்வு செய்ய முடியும். இம் மீளாய்வுகளை மதிப்பீட்டு அளவுகோல் செயற்பாடுகள் மற்றும் செயல்திறன் அளவு கோல்களை மையமாக வைத்து மேற் கொள்ளலாம்.

மிக நன்றாக செயற்பட்ட தாய்மார் கழகங்களை மாவட்ட மற்றும் மாகாண ரீதியான அதிகாரிகளால் மீளாய்வு செய்யப்படுவதுடன் அதற்காக படிவம் 6ஐ பயன்படுத்திக் கொள்ளலாம்.

மிக நன்றாக செயற்பட்ட தாய்மார் கழகங்கள் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை மாவட்ட மற்றும் மாகாண ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் மதிப்பிட்டு பாராட்டப்படுவார்கள்.

**கூட்டங்களை நடாத்துதல்**

கூட்டத்திற்கு சமூகமளிக்கும் அங்கத்தவர்கள் வட்டமாக அல்லது அரை வட்டமாக அமர வேண்டும். குழுவின் தலைவர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தங்களை அறிமுகப்படுத்த அவர்களுக்கு அவகாசம் அளிக்க வேண்டும். கழகத்திற்கு சேரும் புதிய அங்கத்தவர்களுக்கும் அவ்வப்போது அறிமுகப்படுத்த மேற்படி அவகாசம் வழங்க வேண்டும். குழுவின் தலைவர் மிகச் சிறப்பான முறையில் அத் திகதிக்கு உரித்தான தலைப்புகளை விவாதத்திற்கு உட்படுத்தலும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் விவாதத்தை சரியான திசைக்கு செலுத்துவதும் குழுத் தலைவரின் பொறுப்பாகும். சகல உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை பெறுவதற்கு உற்சாகப்படுத்துதல் வேண்டும்.

எனவே மிகச் சிறந்த தொடர்பாடல் மற்றும் நிர்வகிக்கக்கூடிய திறனை கொண்ட உறுப்பினர்களில் ஒருவரை தலைவர் என்ற பதவிக்கு தேர்ந்தெடுத்தல் மிக முக்கியமானதாகும்.

எதிர்வரும் கூட்டத்திற்கு முன் தற்போதைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட சகல விடயங்களையும் செயற்படுத்த ஒவ்வொரு உறுப்பினர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அச்செயற்பாடுகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் அதற்கு தகுந்த படி பின்னூட்டல் வழங்குவதற்கும் சகல உறுப்பினர்களையும் தயார்ப்படுத்தல் வேண்டும்.

**தாய்மார் கழக கூட்டங்களில் கலந்துகொள்ளும் அங்கத்தவர்களின் கடமைகள் :**

1. அவர்களினது சுகாதாரம் மற்றும் போஷணை பிரச்சினைகளுக்கு காரணமான காரணிகளை கண்டறிதல்.

2. கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கான தலையீட்டு பணிகளை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல்.

3. கண்டறியப்பட்ட சுகாதார பிரச்சினைகளுக்கு மேற்கொள்ளும் தலையீட்டுக்களை மேற்பார்வை செய்தல்.

4. சுகாதாரம் மற்றும் போஷணை சம்பந்தமான தகவல்களையும் சிறந்த அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளுதல்.

5. சகலரினதும் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காக அனுபவங்களை பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் பரஸ்பர உபகாரங்களை உறுதிப்படுத்துதல்.

6. மிகச்சிறந்த மனப்பான்மை மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

7. தத்தமது சமூகத்தின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக முன்னுரிமை கொடுப்பவர்களாக திகழ்தல்.

8. கண்டறியப்பட்ட பிரச்சினைகளை சிறப்பாக தீர்த்து கொள்வதற்காக சுகாதார மற்றும் சுகாதாரம் அற்ற பங்குதாரர்களுடன் சமூகமாக செயல் படுவதற்குறிய வழியை ஏற்படுத்திக் கொள்ளுதல்.







**ஒன்றிணைந்த ஒத்துழைப்பு**

பலதரப்பட்ட பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுதல் சமூகத்தின் சுகாதாரத்தை மற்றும் போஷணையை மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். இங்கு மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு புது வருமான வழிகளை ஏற்படுத்தல் மற்றும் வரவு செலவுகளை முகாமைத்துவப்படுத்தல் போன்ற விடயங்களில் திறமைகளை மேம்படுத்த வேண்டும்.

மக்களின் மற்றும் சமூகத்தின் சுகாதாரத்திற்கு நேரடியாக தாக்கம் ஏற்படுத்தக்கூடியதும் சுகாதார துறைக்கு தொடர்பற்றதுமான செயற்பாடுகளை நன்றாக அமுல்படுத்த இவ் ஒன்றிணைதல் மிக முக்கியமானதாகும்.

பிரதேச மற்றும் கிராமிய ரீதியாக பங்குதாரர்களுக்கு உதாரணம்

- கிராம உத்தியோகத்தர்கள்
- விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள்
- சமூர்த்தி உத்தியோகத்தர்கள்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- சமூக நலன்புரி உத்தியோகத்தர்கள்
- சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- நன்னடத்தை அதிகாரிகள்
- ஆலோசணை அதிகாரிகள்
- சமூக சேவை அதிகாரிகள்

மாதாந்த கூட்டு / அமர்வு ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியால காலத்தில் நிகழ்த்த முடிந்தாலும் அக்கால எல்லை நிலமைகளுக்கேற்ப வேறுபடும். அங்கத்தவர்களுக்கு எந்த வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் கூட்டத்திற்கான காலத்தை/ நேரத்தை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.



**கூட்டம் ஒன்றை முடிவுக்கு கொண்டு வரும் போது தலைவர் மூலம்**

1. முக்கியமான தலைப்புகளையும், விடயங்களையும், எடுக்கப்பட்ட முடிவுகளையும் பற்றிய தொகுப்புரையை வழங்க வேண்டும்.

2. மேலதிக கேள்விகள் அல்லது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் விவரணங்களுக்கு இடமளித்தல்.

3. அடுத்த கூட்டத்தின் திகதி மற்றும் நேரம் பற்றிய விபரங்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

4. பொறுப்புக்களை ஏற்பதற்கு அங்கத்தவர்களை ஆர்வமூட்டுதல்.

5. வரவு இடாப்பொன்றை பராமரித்தல் மற்றும் அதில் வருகை தந்த அனைவர்களினதும் கையொப்பம் பெற்றுக் கொள்ளுதல். மேலும் வருகை தந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்தல்.

6. கூட்டத்தின் பின் அக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட மற்றும் எடுக்கப்பட்ட சகல முடிவுளை பற்றியதொரு சிறுகுறிப்பு மேற்கொள்ளுதல் செயலாளரின் பொறுப்பாகும். எதிர்வரும் தேவைகளுக்காக அக்குறிப்புகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியதுடன் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருக்கு குறிப்பின் பிரதி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

## தாய்மார் கழகங்கள் மூலம் அமுல்படுத்த எதிர் பார்க்கப்படும் செயற்பாடுகள்

- **போஷனை மேம்பாட்டு செயற்பாடுகள்**
- **ஏனைய சுகாதார மேம்பாட்டுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள்**



## போஷணை மேம்பாட்டு செயற்பாடுகள்

குறை ஊட்டச்சத்து மற்றும் அதி ஊட்டச்சத்து உட்பட போஷாக்கு சம்பந்தமான பிரச்சினைகள் உள்ள பிரதேசங்களில் போஷணை மேம்பாட்டு விடயம் தொடர்பாக தாய்மார் கழகத்தின் மூலம் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்கவை.






### போஷணை மேம்பாட்டு செயற்பாடுகள் செய்வதன் முக்கியத்துவம்

இலங்கையிலுள்ள பெரும்பாலான சமுதாயங்களைப் பாதிக்கக்கூடிய ஒரு முக்கிய பிரச்சினையாக போஷாக்குப் பற்றாக்குறை விளங்குகின்றது. இது ஒருவரது வாழ்க்கை வட்டாரத்தில் ஆரோக்கியம், கல்விகற்றல், தனிநபர் உற்பத்தித்திறன் போன்ற பல அம்சங்களுக்காக எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

சுய சுகாதாரம் மற்றும் போஷணை நிலைகளை மேம்படுத்துவதற்கு என மிகச் சிறந்த தீர்வுகளை காண்பதற்கு தேவைப்படும் தொழில்நுட்ப அறிவை முறையாக சமூகத்திற்கு வழங்குவதும் சமூக கட்டாய படுத்தலும் அடித்தள மட்டத்தில் பெற்றுக் கொள்ளும் மிக மேலான வெற்றியாகும். இதன் மூலம் நிறை குறை பிள்ளை பிறப்பை குறைத்தல் மற்றும் சிறு பிள்ளைகளின் போஷாக்கு நிலையை சீராக்குதல் என்பவை எதிர் காலத்தில் தொற்றாத நோய்களுடன் சம்பந்தப்படுவதனால் சமுதாயத்தில் தொற்றா நோய்களுக்கு உள்ள தாக்கத்தை குறைப்பதற்கும் உதவும்.




*வரைபடம் 1. வாழ்க்கை வட்டாரத்திற்குள் போஷணைக்கான சவால்கள்*

